DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Principal Sessions Judge, Virudhunagar District at Srivilliputtur.

S.C.No. 69/2024

Deposition of witness for Prosecution/Defence/Court : P.W.5

Accused present

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.வைரவன் | Caste | : |
| Father's /Husband's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the 07th day of January, 2026.

முதல் விசாரணை

நான் தற்போது இராஜபாளையம் அம்பேத்கார் நகர், மேலபாட்டம் கரிசல்குளத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எங்கள் அருகாமையில் உள்ள ஜேஜே நகரைச்சேர்ந்தவர் ஆவார். நான் பெயின்டிங் வேலை செய்துவருகிறேன். சமூக ஆர்வலர் ஆவேன். சாட்சி சக்தி பாலன் என்பவரை எனக்குத் தெரியும்.

சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு எனக்குத் தெரிந்த ஒரு பையனை இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு இரவு சுமார் 1.00 மணிக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றிருந்தோம். அப்போது அங்கு அரசு மருத்துவமனையில் 100 சதவீதம் இறந்தவரின் உடலைக்காட்டி அடையாளம் காட்டச்சொன்னார்கள். அவர் எனது கட்சி கூட்டங்களுக்கு மேடை அமைத்து கொடுத்த ராயப்பன் என்று போலிசாரிடம் சொன்னேன். அதன்பின்னர் காவல் நிலையத்திலிருந்து இறந்தவரின் வீட்டை காண்பிக்கச்சொன்னார்கள். நான் போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் இராஜபாளையம் அம்மன் நகரில் உள்ள

இறந்தவரின் வீட்டை காண்பித்தேன்.

மறுநாள் காவல் நிலையத்திற்கு காலை 11.00 மணிக்கு சென்றேன். போலிசார் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் முடியாது என்று சொன்னேன். போலிசார் வீட்டைக் காண்பித்த வகைக்கு கையொப்பம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் கையொப்பம் செய்தேன். வேறு எதுவும் எனக்குத் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் **பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1ம் கையொப்பம் என்னுடையதுதான். அவை அசாஆ 5 மற்றும் அசாஆ 6** ஆகும்.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக மாற்ற அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை)**

போலீஸார் விசாரித்தார்கள் என்றாலும், போலீஸ் விசாரணையில் சம்பவ இடத்தை போலிசார் கடந்த 23.07.2023ம் தேதி அதிகாலை 2.00 மணிக்கு என் முன்னிலையிலும் சாட்சி சக்திபாலன் முன்னிலையிலும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதன்பின்னர் 3.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து பெயர்த்து எடுக்கப்பட்ட இரத்தக்கறை படிந்த சிமிண்ட் கற்கள் , மற்றும் இரத்தக்கறை படியாத சிமிண்ட் கற்கள் ஆகியவற்றையும், இரத்தக்கறை படிந்த மஞ்சள் கலர் பார்டர் போட்ட பச்சை கலர் துண்டு ஒன்றையும், இரத்தக்கறை படிந்த ஆரஞ்சு மற்றும் வெள்ளை கலரில் கட்டம் போட்ட முழுக்கை சட்டை –1, இரத்தக்கறை படிந்த உடைந்த கண்ணாடி துண்டுகள் மற்றும் உடைந்த பிரேமுடன் கூடிய டிவி பிக்சர் டியூப் ஆகியவற்றை என் முன்னிலையிலும் சாட்சி சக்திபாலன் முன்னிலையிலும் அத்தாட்சியின் பேரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த பார்வை மகஜரிலும் அத்தாட்சியிலும் சம்பவ இடத்தில் வைத்து நானும் சக்திபாலனும் கையொப்பம் செய்ததாக கூறிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை –**

நான் கையொப்பம் செய்த பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று போலிசார் என்னிடம் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை – இல்லை.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.